**கதிர்காமம் பிரதேச சபை - 2022**

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கதிர்காமம் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று , அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கதிர்காமம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் 2021 ஆண்டுகளில் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 490,000 பெறுமதியான 9 கட்டிடங்கள் மற்றும் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாத ரூபா 2,480,000 பெறுமதியான 6 கட்டிடங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிக்கவில்லை. | உடைத்து அகற்றப்பட்ட கட்டிடங்களுக்குப் பதிலாக புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதால் அப்பெறுமதி நிதிக்கூற்றுக் களில் உள்ளடக்கப்பட்டமை தவறானது அல்ல என்று சுட்டிக் காட்டுகிறேன் அத்துடன் ஏனைய ஆதனங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் விரிவாக்கம் செய்வது தொடர்பாக கவனம் செலுத்துவேன். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 743,312 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 524,469 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது | இது வருடக் கணக்காக இருந்து வரும் தவறு ஒன்றாகும் எதிர்காலத்தில் இவ்வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (இ) 2022 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொடர்பாடல் கோபுரக் கட்டணங்கள் ரூபா 60,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொடர்பாடல் கோபுர கட்டணங்களில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும் | பெற வேண்டிய வருமானம் நிதிக் கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப் பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் தேறிய காசு அசைவு காண்பிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதி உள்ளடக்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டு இருக்க வில்லை | காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பது தொடர்பாக மேலும் ஆய்வு செய்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு எதிர்பார்ப்பதாக | சரியாக காசுப் பாய்ச்சல் தயாரிக்கப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப் பட்ட ஆண்டில் நீதிமன்ற தண்டனப் பண வருமானம் ரூபா 302,401 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றில் நீதிமன்ற தண்டப்பண வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டதை சீராக்குவதற்கு எதிர்பார்த்துள்ளேன் | அனைத்து வருமானங்களையும் நிதிக் கூற்றுகளில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 622,400 மற்றும் நன்கொடையாக கிடைத்த ரூபா 189,031 ஆன நூலாக புத்தகங்களின் பெறுமதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 436,957 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிநிலைமை தொடர்பான கூற்றில் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவித்தல் கட்டண வருமானம் 766,800 கணக்கிடு செய்யப்படாதிருந்ததுடன் நிதிநிலைமை தொடர்பான கூற்றில் பெறவேண்டிய விளம்பர பதாகை கட்டணங்கள் ரூபா 598,850 குறைத்து காண்பிக்கப்பட்டிருருந்தது | மீளாய்வாண்டில் பெறவேண்டிய விளம்பர பதாகை கட்டண வருமானங்களை கணக்கீடு செய்யாமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபைக்குச் சொந்தமான அனைத்து வருமானங்களும் சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஏ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் சபைக்கு கிடைத்த ரூபா 26,175,958 தொகை மற்றும் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 23,265,087 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை | இதற்காகச் எதிர்வரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் திணைக்களத்திடமிருந்து ஆலோசணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அந்த ஆலோசணைகளின் பிரகாரம் இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்படுமா அல்லது இல்லையா எனத் தீர்மானிக்க எத்ர்பார்த்துள்ளேன். | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்கள் செலவுகள் சொத்துக்கள் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஐ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைத்த முத்திரை கட்டண வருமானம் ரூபா 195,455 குறைத்து நிதிச் செயலாற்றல் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது | மீளாய்வாண்டிற்குரிய கிடைத்த முத்திரை கட்டண வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்ட தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 137,395 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | பெறவேண்டிய கடை வாடகை வருமானம் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டதை சீராக்க நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 151,356 பெறுமதியான 08 வகைக்குரிய 326 அலகுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | இத்தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இறுதி இருப்பு மீதி சரியாக கணக்கிடப் பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்பு ரூபா 90,667,097 என காண்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய 13 ஆம் இலக்க குறிப்பின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 28,602,901 ஆக இருந்தது. | இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட தேதிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றின் பிரகாரம் சபையின் உரித்து ரூபா 353,276,875 ஆக இருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அது ரூபா 290,960,352 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட கட்டிடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 28,259,182 ஆக இருந்த போதும் அது ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களில் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் ரூபா 22,607,732 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஈ) | சபையின் சபையின் வீத வரி மென்பொருள் முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி மீதி ரூபா 19,141,070 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 18,506,012 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வீதவரி மென்பொருள் முறைமை நாளது வரையாக்கப்படா திருந்தடன் தற்போது இம்மென் பொருளுக்கு தகவல் உட்படுத்தப்பட்டு வருகின்றது அது சீராக்கப்பட்டதன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | சரியான பெறுமதியின் அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (உ) | முத்திரை வைப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 9,600 காணப்பட்ட போதும் நிதி நிலைமை தொடர்பான | முத்திரை வைப்புக்கள் தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை | நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி, பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் |

| | | |
|---|---|---|
| கூற்றில் அது ரூபா 304,501 எனக் காண்பிக்கப்பட்டு இருந்தது | சீராக்குவதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய முத்திரை வைப்புக்கள் மீதி திருத்தம் செய்யப்பட வேண்டும் | உள்ள பெறுமதியுடன் சமனாக இருக்க வேண்டும் |

## 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குரிய பிரதேச சபையின் தலைவரால் பயன்படுத்தப்படும் பெகப் வண்டிக்காக மாதாந்த அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையான 400 லீற்றரை மிகைத்து ரூபா 369,058 ஆன 2134 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது | இது தொடர்பாக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் மூலம் புலனாய்வொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அப்புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளதாக அறியத் தருகிறேன். | பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய வாகன நிறுத்துமிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காக வெளிநபர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த துடன் 2019 ஜூன் முதல் 2021 ஏப்ரல் வகையான காலப்பகுதிக்குரிய சேகரிக்கப்பட்ட தொகையில் அந்நபர்களுக்கு ரூபா 1,733,194 பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் தரகுப் பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | பலஆண்டுகளாக இவ்வாறு சபையால் வாகன நிறுத்து மிடங்களிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டு வந்த போதும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் மீண்டும் ஆட்சேர்ப்பு செய்தால் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்த்து உள்ளேன். | முறையான அங்கீகாரத்தின் கீழ் நபர்களை உரிய ஆட்சேர்ப்பு செய்து சேவையில் ஈடுபடுத்த வேண்டும் |

## 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 217,225,826 கூட்டுப்பெறுமதியான 12 கணக்கு விடயங்கள் தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, காலப்பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் என்பவற்றை சீராக்குவதற்கும் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்க ாக பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாலாவது வரையாக பேணப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(3)(4) | சபைக்கு சொந்தமான குரு கெப் வண்டி 2022 மார்ச் 30 ஆம் தேதி விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அது தொடர்பாக பூரண அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத் தருகிறேன். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | சபையில் காலாவதியான ரூபா 88,356 பெறுமதியான 09 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iii) | நிதிப் பிரமாணம் 1646(ஈ) | 2022 ஆம் ஆண்டுக்கு உரியதாக சபைக்குரிய 20 வாகனங்கள் தொடர்பான ஓட்ட பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | சபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டிற்குரிய ஓட்டக் குறிப்புகளையும் மாதாந்த பொழிப்புக்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விரைவில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்து உள்ளேன் | வாகனங்களுக்குரிய ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | ஊவா மாகாண சபையின் 4/HRM/வ.இ.மா | 05 ஆண்டு சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் | 2023 வருடாந்த இடமாற்ற சபையை கட்டளையின் பிரகாரம் தீர்மானம் | 05 ஆண்டு சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள அனைத்து |

| | | | |
|---|---|---|---|
| /2018 மற்றும் 2017 யூன் 30 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 5.2.5(ஆ) II பிரிவு | கட்டாயமாக இட மாற்றங்களுக்கு உட்பட வேண்டிய போதிலும் 7 முதல் 17 ஆண்டுகள் வரை சேவை புரிந்த 10 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப் பட்டிருக்கவில்லை | செயற்படுத்தப்பட உள்ளது | உத்தியோகத்தர்களும் கட்டாயமாக இட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,925,420 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,580,070 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 9,210,807 | 9,210,807 | 3,252,278 | 5,958,529 | 9,210,807 | 8,143,158 | 3,464,490 | 4,678,668 |
| (ii) | வாடகை | 18,263,500 | 18,263,500 | 1,307,542 | 16,955,958 | 17,858,200 | 5,602,106 | 1,079,805 | 4,522,301 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,230,500 | 372,250 | 372,250 | - | 3,101,700 | 532,050 | 532,050 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 30,210,125 | 98,655,285 | 62,483,130 | 36,172,155 | 28,274,250 | 19,404,169 | 12,618,081 | 6,786,088 |
| | | 59,914,932 | 126,501,842 | 67,415,200 | 59,086,642 | 58,444,957 | 33,681,483 | 17,694,426 | 15,987,057 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்டிருந்த ரூபா 126,501,842 ஆன் மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி ரூபா 59,086,642 3தொகை | ஆண்டிற்குரிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பட்டியலிடப்பட்டிருந்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 47 சதவீதம் ஆகும் | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்ட ரூபா 6,293,052 ஆன வருமானத்தில் ஆண்டில் ரூபா 1,582,317 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி ரூபா 4,590,865 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது அது பட்டியலிட்ட வருமானத்தில் 73 சதவீமாகும். | நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக அறவிட முடியாதிருந்த வீத வரியை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பட்டியலிடப்பட்டிருந்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 19 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதற்காக ரூபா 13,380,425 ஆன கேள்வி ஆதன வருமானத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,756,096 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கேள்வி ஆதன வருமானத்தின் அறவீடு 20 சதவீதமான குறைந்த அளவாக இருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியதற்காக பெறவேண்டிய நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்து உள்ளேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 11 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,522,800 ஆன கடையில் வருமானத்திலிருந்து 2022 திசெம்பர் 31ல் உள்ளவாறு ரூபா 3,956,300 ஆன கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 87 சதவீதம் ஆகும் | கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்து உள்ளேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | சபை அதிகார பிரதேசத்தில் வெவ்வேறு நிறுவனங்கள்/ நபர்களால் காட்சிப்படுத்தப் பட்டிருந்த 67 விளம்பர பதாகைகளிலிருந்து முன்னைய ஆண்டுக்கும் மீளாய்வாண்டிற்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 766,800 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்க வில்லை | நிலையான விளம்பர பதாதைகளுக்குரிய வருமானத்தை அறவிடு வதற்கு தற்பொழுது நிறுவனங்கள் / ஆட்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் அவ்வருமானங்களை அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிக் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை அதிகார பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த | குறித்த பணத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு | நிலுவை வருமானத்தை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | 09 தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 60,000 ஆன அனுமதிப்பத்திர வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை | வருகின்றன. | அறவிடப்படல் வேண்டும். |
| (எ) | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 472,086 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 2,304,515 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கின்றேன் | சபைக்கு பெற்வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் விரைவில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | பஸ்தரப்பிட வளவில் அமைந்துள்ள பொது முலசலகூடம் 2022 சளவரி 01 ஆந் திகதி முதல் ஓராண்டிற்காக ரூபா 825,000 இற்கு முதலாவது தடவை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் குறித்த குத்தகையாளரால் 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரை பணக்கொடுப்பனவினை மேற்கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சட்ட நடவடிக்கைளை எடுத்து குத்தகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையால் வழங்கப்பட்டிருந்த 07 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்த போதும் அந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது | அக்கைத்தொழில்கள் மூடப்படப்படுவதற்கு உள்ளதால் மீண்டும் பரிசோதித்து அறிக்கையொன்றை கணக்காய்விற்கு வழங்க எதிர்பார்த்துள்ளதாக | சபையினால் அதிகார பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையில் தீயணைப்பு அலகொன்று நிறுவப்பட்டிருந்த போதும் நீர் மோட்டார் தானாக இயங்க முடியாதிருந்தமை பாதுகாப்பு சீருடை இல்லாமை காரணமாக மிகவும் செயற்திறனான சேவை ஒன்றை வழங்க முடியாமல் இருந்தது | இம்மோட்டார் தானாக இயங்க முடியாத போதும் அதனை மிக குறுகிய காலப்பகுதியில் இயங்க வைக்க இயலுமை உள்ளதால் தீயணைப்பு நடவடிக்கைகளுக்காக தானாக இயங்க முடியாமை தடை ஒன்றாக இல்லை. தீயணைப்புப் பிரிவின் அனைத்து பதவியணியினருக்கும் 2022 ஆம் ஆண்டிற்காக சீருடை வழங்கப்பட்டுள்ளது | நீர் மோட்டார் தானாக இயங்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | கதிர்காமம் புனித பூமி அபிவிருத்தி குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் 2020 ஜூலை 16 ஆம் திகதி முதல் 05 ஆண்டுகளுக்கு கதிர்காம புனித பூமியில் புதிய மலசலகூட தொகுதியை நடத்திச் செல்வதற்காக கதிர்காம பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த இருந்த போதும் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் இந்த ஆதனங்களை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | கதிர்காம புனித பூமியின் புதிய மலசலகூட தொகுதியை குத்தகைக்கு வழங்குவதற்காக பெறுகை நடைமுறை ஊடாக நடத்திச் செல்வதற்காக கேள்விதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு இருந்த போதும் ருஹுனு கதிர்காம தேவாலயத்தின் நிர்வாக அதிகாரியினால் அக்கோள்விதாரருக்கு மலசல கூடங்களை நடாத்திச் செய்யும் இடையூறு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் நிர்வாக அதிகாரியுடன் இணக்கத்திற்கு வருவதற்கு முயற்சி எடுத்த போதும் அது வெற்றியளிக்கவில்லை. அதன் கேள்வி கட்டணங்களை கொடுப்பனவு செய்யுமாறு எழுத்துமூலம் அறிவித்திருந்த போதும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமாக காணப்படும் ஆதனங்களை குத்தகைக்கு வழங்கி வருமானதத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2** <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 - 2021 ஆண்டு காலப்பகுதியில் அலுவலக உத்தியோகத்தர்கள் அல்லாத 3 வெளி நபர்களுக்கு வருமானத்தை சேகரிப்பதற்காக 12 சந்தர்ப்பங்களில் 12 பற்றுச்சீட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன் அப் | வருமானங்களை சேகரிப்பதற்காக வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 12 பற்றுச் சீட்டுக்களில் 2 புத்தகங்களுக்கு பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் | நீண்டகாலமாக வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டு புத்தகங்களை விரைவில் |

| | | |
|---|---|---|
| புத்தகங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கோ பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | எஞ்சியவற்றை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையால் 2012 ஆம் ஆண்டின் போது இறுதியாக வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் கால ரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை | வீத வரி மதிப்பீடு செய்வதற்காக தற்போது உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் முடியுமான வரையில் வீத வரி மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வீதவரி மதிப்பீடு கால ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டும் |
| (ஆ) பிரதேச சபை அதிகாரம் பிரதேசத்தில் உரிமையாளர்களை இனங்காணப்படாத 885 வீத வரி அலகுகள் காணப்படுகின்றதுடன் உரித்தாளர்களை இனங்கண்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எதிர்பார்த்துள்ளேன் | நிலுவை வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான விண்ணப்பங்களை தானாக அச்சிடுவதற்காக வழங்கப்பட்டிருந்த இயந்திர ஒன்று வழங்கப்பட்ட திகதியில் இருந்து குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டதுடன் அவ்வியந்திரத்தை வழங்கிய திகதி, நிறுவனம், பெறுமதி போன்ற தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | இவ்வியந்தரத்தை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களை உயர் செயற்திறனுடன் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும் |
| (ஆ) கதிர்காம பிரதேச சபையின் ஓய்வு மண்டபத்திற்காக 2019 பெப்ரவரி 27 ஆம் தேதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 28,000 பெறுமதியான உணவு மேசை ஒன்று 2021 | பற்றாக்குறை பொருட்கள் பொருட்கள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இந்த பற்றாக்குறை | பொறுப்பான தரப்பினரை இனங் கண்டு நட்டத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி 01 ஆம் தேதி பிரதேச சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 2000 லிட்டர் அளவிலான 10 பிளாஸ்டிக் நீர் தாங்கிகளும் (Blue tech) 2022 ஜூலை 08 ஆந் திகதி அளவில் காணாமல் போயிருந்தன. | தொடர்பாக கருத்தில் கொள்ளப்படுவதால் குழு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக. | |
| (இ) | சபையினால் 2021 நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிக்கள பரிசோதனையின் பிரகாரம் பிரதேச சபைக்கு உரியதாக இனங் காணப்பட்டிருந்த 8 மயானங்கள் 11 சனமூக நிலையங்கள் 02 காணிகள் மற்றும் 23 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களை மிக விரைவில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 12 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 18 ஊழியர் வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை. | இரச கொள்கையொன்றாக புதிய ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளதாக | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 1995 ஏப்ரல் முதல் 2000 திசெம்பர் வரையான காலப் பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு செய்யாமை காரணமாக ரூபா 40,382 ஆன நிலுவை ஒன்றும் ரூபா 20,191 ஆன மிகை அறவீடு ஒன்றையும் ம் செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | இக்காலப் பகுதியை மிகைத்து 23 ஆண்டுகள் கடந்து இருந்ததால் இதற்குரிய தகவல்கள் மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங் காண முடியவில்லை. நீதிமன்ற செயற்பாடு காரணமாக கொடுப்பளவு செய்ய நேர்ந்தது. | சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற கழிப்பனவுகளை உரிய கால ரீதியில் மேற்கொண்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். |

**4. <u>கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்</u>**

**4.1 <u>உள்ளக கணக்காய்வு</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் 2022 | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதும் பதவியணியினர் பற்றாக்குறை | சபையின் உள்ள கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை | காரணமாக அவரை கடமைக்காக ஈடுபடுத்த வேண்டி இருந்தது எதிர்காலத்தில் இந்நிலைமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஒருவரை நியமித்து அவர் மூலமாக குறித்த கடமைகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும் |

**4.2 <u>கணக்காய்வுக் குழு</u>**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) ஆம் பிரிவு மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 ஜனவரி 12 ஆம் திகதிய டீஎம்ஏ/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்த வேலைகளுக்காக திருத்த வேலைகளுக்காக கணக்காய்வு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தப்பட்டு இருக்கவில்லை | உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமை குழுக் கூட்டத்தில் பங்குபற்றி இருந்ததுடன் இவ்வாண்டின் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழுவினை நடாத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன். | தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் ஏனைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 17 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டதால் வருமான செலவினக் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று பொருளாதார சிக்கல்கள் எரிபொருள் தட்டுப்பாடு போன்ற விடயங்கள் காரணமாக திட்டமிடப்பட்ட வகையில் செயற்பட முடியவில்லை. | சரியான பாதீடு தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |